1972 ஆகஸ்ட் 19]

வருடங்களுக்கு ஒரு முறை அவசியம் ஏற்படும்பொழுது மாற்றம் செய்வதுபோல ஊராட்சி ஒன்றியங்களில் பணிபுரியும் ஊழியர்களையும், நிர்வாகம் நன்கு செயல்பட நிர்வாக அடிப்படையில் அவசியம் ஏற்படும்பொழுது ஒரு ஒன்றியத்திலிருந்து வேறொரு ஊராட்சி ஒன்றியத்திற்கு மாற்ற மாவட்ட ஆட்சியருக்கு அதிகாரம் வழங்க வேண்டும் என அரசைக் கோரி தீர்மானங்கள் அனுப்பி உள்ளன.

(இ) இத் தீர்மானங்கள் பேரில் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு இந்தப் பொருள் அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. கே. ஏ. வகாப் : இப்படி இந்தப் பணியாளர்களை மாற்றுகிற அதிகாரத்தை மாவட்ட ஆட்சித் தலைவர்களிடத்தில் தருவதைப் போன்று ஆசிரியர்களை மாற்றுகிற அதிகாரத்தை கல்வி அதிகாரிகளிடத்திலேயே தருகிற செயற்குறிப்பு அரசாங்கத்தினிடம் இருக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அதுபற்றி முடிவு செய்ய முன்பு அட்ஹாக் கமிட்டி இருந்தது. அது இப்போது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. அதுபற்றி தலைவர்களைக் கலந்து கொண்டு எத்தகைய முடிவை எடுக்கலாம் என்பது பற்றி அரசு தீர்மானிக்கும் என்று முதல்வர் தெரிவித்திருக்கிறார். இது ஓரிடத்தில் இருந்து மற்றொரு இடத்திற்கு மாற்ற வேண்டுமென்று சொன்னால் ஒன்றியங்களின் சம்மதத்தை, நகராட்சி மன்றங்களின் சம்மதத்தை பெற்றே மாற்ற வேண்டியதாக இருக்கிறது. சம்மதம் பெறுவதில் பலவிதமான இடையூறுகள் வந்துவிடுகின்றன. அங்கேயே தங்களை இருத்திக்கொள்ள முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டுவிடுகின்றன. ஆகவே அதிகாரிகள் மட்டத்திலேயே மாற்றம் பற்றி தீர்மானிக்க தலைவர்களைக் கலந்துகொண்டு விரைவில் தக்கதொரு முடிவு எடுக்கப்படும்.

Buildings for Panchayat Union Councils in Kanyakumari district

* 185 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) the number of Panchayat Unions for which Council Halls have been constructed so far in Kanyakumari District; and

(b) the details of the cost of construction of these halls?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) நான்கு.

	ரூபாய்
(இ) (1) தக்கலை (அலுவலகக் கட்டிடமும், ஊராட்சி ஒன்றிய மண்டபமும் சேர்த்து)	97,776
(2) திருவட்டார் (அலுவலக கட்டிடமும் ஊராட்சி ஒன்றிய மண்டபமும் சேர்த்து)	65,435
(3) குருந்தென்கோடு (அலுவலக கட்டிடமும் ஊராட்சி ஒன்றிய மண்டபமும் சேர்த்து)	62,000
(4) ராஜாக்கமங்கலம் (ஊராட்சி ஒன்றிய மண்டபம் மட்டும்)	12,339

திரு. என். டென்னிஸ் : பஞ்சாயத்து யூனியன் கவுன்சில் ஹால் இல்லாததால் கூட்டங்கள் கூட போடுவதற்கு வசதியில்லாமல் இருக்கிறது. அத்தகைய பஞ்சாயத்து யூனியன்களுக்கு கவுன்சில் ஹால் கட்டுவதற்கு எப்போது நடவடிக்கை எடுக்கப்படும் என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அகஸ்தீஸ்வரம், கிள்ளியூர் போன்று நான்கு பஞ்சாயத்து யூனியன்களுக்குத்தான் மீட்டிங் ஹால் கட்டப்படாமல் இருக்கிறது. அவை கட்டுவதற்கு 25 ஆயிரம் தேவைப்படும் என்றும் மதிப்பீடு போடப்பட்டிருக்கிறது. அதற்கு வகை செய்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : இப்போது இந்த மன்றங்கள் ஸ்தாபன காங்கிரஸ் கையில் இருப்பதன்காரணமாகத்தான் கவுன்சில் ஹால் கட்டப்படவில்லை என்கிற புகார் இருக்கிறதே. இந்த வருடமாவது அந்த மன்றங்களைக் கட்ட அரசாங்கம் ஆணை பிறப்பிக்க முன்வருமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இதில் அரசியல் நோக்கம் கற்பிப்பதற்கு இயலாது. தொடர்ந்து அவை ஸ்தாபன காங்கிரஸ் கட்சியினர்களிடமே இருந்து வந்திருக்கிற காரணத்தினால் முன்பே மீட்டிங் ஹால் கட்டப்பட்டிருக்கலாம். அப்போது

1972 ஆகஸ்ட் 19]

விடப்பட்டதற்கு அரசியல் காரணமாக இருக்க முடியாது. இப்போதும்கூட இந்த நான்கும் ஸ்தாபன காங்கிரஸ் கையில்தான் இருக்கிறது என்று சொல்ல முடியாது. ஆகவே இதில் அரசியல் நோக்கத்திற்கு இடமில்லை. எப்படியும் இவை கட்டப்படு வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

Cancer treatment centres.

* 186 Q.—DR. H. V. HANDE: Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether the Government have any proposal to open a cancer centre in all the Government Hospitals in big towns; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) எல்லா மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகளிலும் புற்றுநோய் சோதனை சிகிச்சை நிலையங்களை படிப்படியாகத் தொடங்குவது குறித்து அரசு ஆய்வு செய்துகொண்டு வருகிறது.

(இ) முதற்கண், புற்று நோயாளிகளுக்குச் சிகிச்சை அளிக்க இயலும் வகையில் எக்ஸ் கதிர் நுண்ணிய இயந்திர சிகிச்சை வசதியுள்ள கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் 32 படுக்கைகள் கொண்ட புற்றுநோய் சிகிச்சைப் பிரிவு ஒன்றை ஏற்படுத்துவதற்கான செயற்குறிப்பு உள்ளது.

DR. H. V. HANDE: While welcoming the measure may I know whether it will be possible as a preliminary step to have at least in headquarters hospitals a point where survey can be made as to the pre-cancerous condition so that later on treatment can be given. May I know whether it is possible to institute cells in major headquarters hospitals to make a survey of the pre-cancerous stage?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: சர்வே நடத்துவது என்பதை ஒரு பரிசீலனை நடத்துகிற அளவில் காஞ்சீபுரம் அறிஞர் அண்ணா கான்சர் இன்ஸ்டிட்யூடில் சென்ற இரண்டு ஆண்டுகளாக நடத்தப்பட்டு வருகிறது. யார் யாருக்கு புற்று நோய் காணப் பட்டிருக்கிறது என்பதை ஆராய்ந்து, உடனே அதற்கு சிகிச்சை அளிக்க வசதியும், வாய்ப்பும் இல்லாத நிலை அவர்கள்